பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
22 07 2025 TUESDAY 6.30 PM
மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பஹல்காம் தீவிரவாத தாக்குதல், பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்டவை குறித்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.
- நாட்டில் கூட்டுறவு கடன் சங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று மக்களவையில் தெரிவித்துள்ளார்.
- காவிரி பிரச்சினை தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு பின்னரே கோதாவரி – காவிரி இணைப்புத் திட்டம் பரிசீலிக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு துரைமுருகன் கூறியுள்ளார்.
- திருமணத்திற்கு தாலிக்கு தங்கம் வழங்குவதுடன், அரசே பட்டுச்சேலையும் வழங்க அஇஅதிமுக நடவடிக்கை எடுக்கும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.
- உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும், பஹல்காம் தீவிரவாத தாக்குதல், பீகார் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, முதலில் நண்பகல் 12 மணிவரையிலும், பின்னர் பிற்பகல் இரண்டு மணிவரையிலும் அவை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோதும் அமளி நீடித்ததால், மக்களவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் இதே பிரச்சினையை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் இருமுறை ஒத்திவைக்கப்பட்ட அவை, பின்னர் நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<>>>>>

நாட்டில் கூட்டுறவு கடன் சங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

மக்களவையில் இன்று எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்தும் திட்டத்திற்கு கடந்த 2023-ஆம் ஆண்டு மத்திய அரசு ஒப்புதல் அளித்ததை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ், 2 லட்சம் பன்னோக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களை நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த மாதம் வரை 22 ஆயிரத்து 606 சங்கங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு கடன் சங்கங்களை கணினி மயமாமக்குவதற்கு, 2 ஆயிரத்து தொள்ளாயிரத்து 25 கோடி ரூபாயை மத்திய அரசு அனுமதித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கூட்டுறவுத்துறையில் புத்தொழில் நிறுவனங்களை தொடங்க வகை செய்யும் 'Yuva Sahakar ' திட்டம், மகளிரை தொழில் முனைவோராக உருவாக்கும் 'Nandini Sahakar திட்டம் உள்ளிட்டவை செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தனிநபர் வருமானத்தில் தமிழகம் நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி மக்களவையில் அறிவித்துள்ளது குறித்து மாநில அரசு மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

தனிநபர் வருமானம் தேசிய அளவில் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 710 ரூபாயாக உள்ள நிலையில், தமிழகத்தில் தனிநபர் வருமானம் ஒரு லட்சத்து 96 ஆயிரத்து 309- ரூபாயாக உள்ளது .

தமிழக அரசு பின்பற்றிவரும் தொலைநோக்குத் திட்டங்களால் இந்த சாதனையை நிகழ்த்த முடிந்ததாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

காவிரி பிரச்சினை தொடர்பாக உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு பிறகே கோதாவரி – காவிரி இணைப்புத்திட்டம் குறித்து பரிசீலிக்கப்படும் என்று நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

வேலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இத்திட்டத்தை திமுக அரசு கிடப்பில் போட்டுவிட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ள குற்றச்சாட்டு தவறானது என்றார்.

முன்னதாக, காட்பாடியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசிய திரு துரைமுருகன், ஆட்சி நடத்துபவர்களும், அரசு அதிகாரிகளும் இணைந்து செயல்பட்டால்தான் மக்களுக்கான நலத்திட்டங்களை விரைவாக செயல்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>

அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தால் திருமணத்திற்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தோடு, அரசே பட்டுச்சேலை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் நெசவாளர்களுடன் கலந்துரையாடிய அவர், பாரம்பரிய நெசவு தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

கைத்தறி, விசைத்தறி ஆகிய இரு தொழில்களும் பாதிக்கப்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதுடன், நெசவாளர்களின் கூலி உயர்த்தப்படும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் நான்கு பேரையும் வரும் ஒன்றாம் தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த இந்த மீனவர்களை சர்வதேச கடல் எல்லை அருகே இன்று அதிகாலை கைது செய்த இலங்கை கடற்படையினர் அவர்களின் படகையும் பறிமுதல் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

தொடர் மழை எதிரொலியாக வெளிமாநில தக்காளி வரத்து குறைந்ததன் காரணமாக தருமபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் தக்காளி விலை அதிகரித்துள்ளது.

ஒரு கிலோவுக்கு பத்து ரூபாய்க்கும் அதிகமாக விலையேற்றம் கண்டதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*Sound Byte – தண்டபாணி – 44 Sec.)*

<<<<<<>>>>>

நீலகிரி, கோவை மாவட்ட மலைப்பகுதிகள் உள்ளிட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளர்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்துள்ளார்.

*('Voice Byte - ' செந்தாமரை கண்ணன் - 48 'Sec.)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சர்வதேச தேசிய மற்றும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற தமிழகத்தை சேர்ந்த பள்ளி மாணவ, மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் இன்று வழங்கினார்.

--------

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு தொழிற்சாலை விபத்துகளில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகையை மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு வழங்கினார்.

------------------

நாமக்கல் மாவட்டத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்பும் பயனாளிகள் உரிய திடட அறிக்கையுடன் வங்கிக்கிளைகளை அணுகுமாறு ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி கேட்டுக்கொண்டுள்ளார்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் கடந்த 2022-ஆம் ஆண்டில் கொடிநாள் நிதி அதிக அளவில் வசூல் செய்த ஆறு அலுவலர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை ஆட்சியர் திருமதி சந்திரகலா வழங்கினார்.

---------------

தேசிய புள்ளியில் துறையின் 75-ஆவது ஆண்டு விழா மற்றும் சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சி கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை மலை கிராமத்தில் கொண்டாடப்பட்டது.

---------------

திருப்பூர் மாவட்டத்தில் அட்டை குடோன் ஒன்றில் திடீரென தீப்பிடித்ததில் சுமார் 15 லட்சம் ரூபாய் மதிப்பிலான அட்டைகள் எரிந்து தீயில் கருகியது.

----------------

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப்பொருட்களை காவல்துறையினர் எரித்து அழித்தனர்.

---------------

சென்னை பெருநகர காவல்துறையில் பணியாற்றும் காவலர்களின் குறைகளை மாநகர காவல் ஆணையர் திரு அருண் கேட்டறிந்தார்.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனாகத் சிங் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றில் அவர், 11-1, 11-6, 11-1 என்ற செட் கணக்கில், பிரான்சின் Ines Guyot -வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் Arihant மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

உலக பாரா எலைட் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பவினா பென் பட்டேல் வெண்கலப்பதக்கம் வென்றார்.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**<<<<<<END>>>>>**